[1st September 1959

SRI K. VINAYAKAM: Are the Government aware that in South Madras, viz., Kodambakkam, there is a place set apart for locating an infectious diseases hospital, a land owned by military authorities who have given it back to the State Government for this purpose?

THE HON. SRI M. A. MANICKAVELU : தென் சென்னையில் கோட்டூர் என்று ஒரு கிராமம் இருக்கிறது. இதை அங்கு வைக்கலாம் என்று ஏற்பாடு செய்திருந்தது. ஆனால் அது கைவிடப்பட்டுவிட்டது. எங்கே ஆரம்பிப்பதாக இருந்தாலும் அங்கே குடியிருப்பவர்கள் ஆட்சேபனை செய்கிறார்கள்.

SRI P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 35 தொத்து நோய் ஆஸ்பத்திரிகள் கட்டப்படும் என்று ஊட்டியில் நடந்த சுகாதார போர்டு கூட்டத்தில் டைரெக்டர் அவர்கள் தெரிவித்தார்கள். அதன்படி இதுவரை எத்தனை ஆஸ்பத்திரிகள் கட்டப்பட்டிருக்கின்றன ? இன்னும் எங்கெங்கு கட்டுவதாக உத்தேசம்?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதெல்லாம் கட்டுகிற பொருப்பு ஸ்தல-ஸ்தாபனத்தினுடையது. இவைகளைக் கட்ட அவர்கள் முன் வந்தால் அரசாங்கம் பாதிப் பணம் கொடுக்கும். அதற்காகும் செலவுக்குக் கூடுமான தொகை கொடுக்க திட்டம் இருக்கிறது. அதற்கு ஸ்தல-ஸ்தாபனம் முன் வரவேண்டும்.

Lignite Corporation, Neyveli

* 36 *Q.*—SRI S. LAZAR: Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is a proposal by the Government to induce the Lignite Corporation at Neyveli to have one or two buses with guides to take the visitors round on payment of fare?

THE HON. SRI R. VENKATARAMAN: No, Sir. There is no such proposal under the consideration of the Government. However it is understood that the Neyveli Lignite Corporation has under consideration a proposal to show round the visitors in the transport provided by the Corporation. There are already three information guides to take visitors round the Project.

Rayon

* 44 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தேசீய தொழிலபிவிருத்திக் கார்ப்பொரேஷன் மூலமாக வெங்காயச் சருகு சேலை தொழிற்சாலை (ரேயான் துணி உற்பத்தித் தொழிற்சாலை) ஒன்றை சென்னை ராஜ்யத்தில் அமைப்பது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை ஏதாவது நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அவ்வாறு பரிசீலனை நடத்தப்பட்டுவரின், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI R. VENKATARAMAN: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 45 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை ராஜ்யத்தில் நார்ப்பட்டு உற்பத்தி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கத்தாரால் பரிசீலனை நடத்தப்பட்டு வருகிறதா ?